பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
17 01 2025 **FRIDAY** 6 30 **PM**
வணக்கம் - மாநிலச் செய்திகள்
தலைப்புச் செய்திகள்

1. பசுமை தொழில்நுட்ப வளர்ச்சிக்கு மத்திய அரசு உயர்முன்னுரிமை அளித்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. நாடு அனைத்து துறைகளிலும் விரைவான வளர்ச்சியை கண்டு வருவதாக மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3. கேபிள் ஒளிபரப்பு விதிகளில் முக்கிய திருத்தங்களை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது.

4. ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று நிறைவடைந்தது.

5. தில்லி சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா - இங்கிலாந்தின் **Naiktha Bains** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

>>>>>><<<<<<

பசுமை தொழில்நுட்ப வளர்ச்சிக்கு மத்திய அரசு உயர்முன்னுரிமை அளித்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் சர்வதேச வாகன கண்காட்சியை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

உயிரி எரிபொருள் பயன்பாடு மற்றும் மின்சார வாகன உற்பத்திக்கு ஊக்கமளிக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

வாகன உற்பத்தி துறையில் இந்தியா முத்திரை பதித்து வருவதாகவும் அவர் கூறினார்.

உற்பத்திக்கான இந்தியா இயக்கம், உலகத்திற்கானது என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

நாடுமுழுவதும் அதிவிரைவு சாலைகள் மற்றும் ஆறு வழி நெடுஞ்சாலைகள் ஏற்படுத்தப்பட்டு வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

மின்சார வாகனங்களின் விற்பனை கடந்த பத்தாண்டுகளில் 640 மடங்கு அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பத்தாண்டுகளுக்கு முன்னர் வருடத்திற்கு 2 ஆயிரத்து 600 வாகனங்கள் விற்பனை செய்யப்பட்டதாக அவர் கூறினார்.

தற்போது இதன் எண்ணிக்கை 16 லட்சத்து 80 ஆயிரமாக அதிகரித்துள்ளதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

>>>>>><<<<<<

தொலைத்தொடர்பு துறையில் இந்தியா முன்னணியில் திகழ்வதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் தொலைத்தொடர்பு துறையின் மூன்று புதிய சேவைகளை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

தொழில்நுட்பம் வாயிலாக வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்டுவதற்கு இந்த புதிய வசதிகள் உதவிடும் என்று அவர் கூறினார்.

தேசிய அகண்ட அலைவரிசையின் இயக்கம் தொடங்கப்பட்டதை சுட்டிக்காட்டிய அவர், ஊரக பகுதிகளுக்கு அதிவேக இணையதள வசதியை உருவாக்க இது உதவிடும் என்றார்.

53 கோடிக்கும் மேற்பட்டோர் மின்னனு வங்கிச் சேவையை பெற்றிருப்பதாக அவர் கூறினார்.

கடந்த ஆண்டு மட்டும் 247 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு மின்னனு பரிவர்த்தனைகள் நடைபெற்றிருப்பதாவும் அவர் தெரிவித்தார்.

அரசு சேவைகளை பெறுவதற்கான ஒருங்கிணைந்த கைபேசி செயலியும் இன்று அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையின் கீழ், நாடு அனைத்து துறைகளிலும் விரைவான வளர்ச்சியை கண்டு வருவதாக மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

ஜார்க்கண்ட் மாநிலத்தில் இன்று மத்திய அரசின் வளர்ச்சித் திட்டங்களின் செயலாக்கம் குறித்து ஆய்வு மேற்கொண்டு அவர் பேசினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை குறித்த காலத்திற்குள் எட்டும் நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக திரு. எல். முருகன் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

விவசாயிகளின் நலனுக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர், பயிர்க்கடன் வழங்குவது 349 சதவீதம் அதிகரித்துள்ளதாக வேளாண்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

2013ஆம் ஆண்டு 7 லட்சத்து 30 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு பயிர்க்கடன் வழங்கப்பட்டதாகவும், தற்போது இது 25 லட்சத்து 48 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

கேபிள் ஒளிபரப்பு விதிகளில் முக்கிய திருத்தங்களை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது.

இதற்கான அறிவிக்கையை தகவல் ஒலிபரப்புத்துறை வெளியிட்டுள்ளது

இதன்படி, உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்கள் பதிவு செய்யும் நடைமுறை இனி, ஆன்லைன் வாயிலாகவே நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்களுக்கு வழங்கப்படும் உரிமத்தின் காலம் ஐந்தாண்டுகளாக நீட்டிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

அத்தியாவசிய பொருட்களின் கையிருப்பு மற்றும் விலை விவரங்கள் உன்னிப்பாக கண்காணிக்கப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

விவசாயிகள் மற்றும் நுகர்வோர் நலன்களை பாதுகாக்கும் வகையில் விலை நிலவரங்கள் இதற்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக நுகர்வோர் துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

உற்பத்தியை அதிகரிப்பது, ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கொள்கைகளை தேவைக்கேற்ப மாற்றுவது, அத்தியாவசிய பொருட்கள் போதுமான அளவு கையிருப்பில் இருப்பதை உறுதி செய்வது போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இவற்றின் விலை சீராக உள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

முன்னாள் முதலமைச்சர் பாரத் ரத்னா எம்.ஜி. ராமச்சந்திரனின் பிறந்த தினம் இன்று கொண்டாடப்பட்டது.

இதனையொட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்துள்ள காணொலிப் பதிவில், ஏழை மக்களின் மேம்பாட்டிற்காக பாடுபட்ட தலைவர் எம்ஜிஆர் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

(சவுண்ட் பைட் – தமிழ் மோடி 50 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை தொகுதிக்கு அடுத்த மாதம் 5ஆம் தேதி நடைபெறவுள்ள இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று நிறைவடைந்தது.

திமுக சார்பில் திரு. சந்திரகுமார், நாம் தமிழர் கட்சியின் சார்பில் திருமதி. சீதாலெட்சுமி உட்பட 55 பேர் வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை நாளை நடைபெறவுள்ளது.

வேட்புமனுக்களை விலக்கிக்கொள்வதற்கு வரும் 20ஆம் தேதி கடைசி நாளாகும்.

அன்றைய தினமே இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும்.

>>>>>><<<<<<

சூரியமின்சக்தி மற்றும் காற்றாலை மின்உற்பத்தியை அதிகரிப்பதற்கென தனி அமைச்சகத்தை மாநில அரசு ஏற்படுத்த வேண்டும் என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச. ராமதாசு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மரபுசாரா மின்உற்பத்தி திட்டங்களை செயல்படுத்துவதற்கும், ஊக்கமளிப்பதற்கும் போதிய கொள்கைகளும், வழிகாட்டுதல்களும் இல்லாததும் தான் இதற்கு காரணம் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக, இதில் தமிழகம் பின்தங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

காற்றாலை மற்றும் சூரியசக்தி மின்சாரத்திற்கான வளங்கள் தமிழகத்தில் இருந்தபோதிலும், அதனை முறையாக பயன்படுத்துவதற்கான கொள்கைகளை தமிழக அரசு வகுக்கவில்லை என்றும் திரு. ராமதாசு குறை கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

செல்ஃபோன் மற்றும் தடை செய்யப்பட்ட போதைப் பொருட்கள் சிறை வளாகத்திற்குள் எப்படி கொண்டு செல்லப்படுகிறது என்பது குறித்து அறிக்கை தாக்கல் செய்யுமாறு சென்னை உயர்நீதிமன்றம் சிறைத்துறை டிஜிபிக்கு உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான மனுவினை விசாரணை செய்த நீதிபதிகள் திரு. எஸ்.எம். சுப்பிரமணியம், திரு. லெட்சுமி நாராயணன் அமர்வு இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

இவ்வழக்கின் விசாரணை, வரும் 21ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

மதுரை மெட்ரோ ரயில் திட்டம் 11 ஆயிரத்து 368 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படவுள்ளதாக சென்னை மெட்ரோ நிறுவனத்தின் மேலாண் இயக்குநர் திரு. சித்திக் கூறியுள்ளார்.

இன்று மதுரையில் இந்த திட்டம் தொடர்பாக ஆய்வு மேற்கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

(சவுண்ட் பைட் - சித்திக் 42 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த நான்கு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தஞ்சாவூர், திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, புதுக்கோட்டை, ராமநாதபுரம், தூத்துக்குடி, கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

மாவட்டச் செய்திகள்

திருப்பத்தூர் மாவட்டம், வெள்ளைக்குட்டை கிராமத்தில் நடைபெற்ற எருதுவிடும் விழாவில் 200-க்கு மேற்பட்ட காளைகள் பங்கேற்றன.

>>>>>><<<<<<

நாமக்கல் மாவட்டம், பொன்னேரியில் நடைபெறவுள்ள ஜல்லிக்கட்டு போட்டியில் 700 காளைகளும், 400 மாடுபிடி வீரர்களும் பங்கேற்கின்றனர்.

>>>>>><<<<<<

திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற மறுஊடல் விழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

>>>>>><<<<<<

திருப்பூர் மாவட்டம், வெள்ளக்கோவில் அருகே கள்ளச்சாராயம் காய்ச்சியது மற்றும் அருந்தியது தொடர்பாக 3 பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

தில்லி சர்வதேச மகளிர டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா - இங்கிலாந்தின் **Naiktha Bains** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற மகளிர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-2, 6-4 என்ற செட்கணக்கில் இந்தியாவின் **Riya Bhatia – Vaidehi Chaudhari** இணையை வென்றது.

>>>>>><<<<<<

உலக கோப்பை **Kho Kho** போட்டியின் காலிறுதி ஆட்டங்கள் இன்று நடைபெறுகின்றன.

>>>>>>**END**<<<<<<